பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 05 2024 **SUNDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ள ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. **Remal** புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரண்டு கப்பல்கள் மற்றும் மீட்புக்குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாக இந்திய கடற்படை கூறியுள்ளது.

3. இந்தியாவிலிருந்து இவ்வாண்டு ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் 32 ஆயிரம் பேருக்கு ஜெட்டாவில் இருந்து, மெக்கா செல்ல அதிவிரைவு ரயில் சேவையை சவுதி அரேபிய ரயில்வே முதல் முறையாக வழங்கியுள்ளது.

4. கேன்ஸ் திரைப்பட விழாவில், **All We Imagine as Light** என்ற பாயல் கபாடியாவின் திரைப்படம் கிராண்ட் பிரிக்ஸ் விருது பெற்றுள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிராக டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>>**

மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

எட்டு மாநிலங்களுக்கு உட்பட்ட 57 தொகுதிகளில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இந்த தேர்தலுக்காக அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் முழுவீச்சில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பீகார் மாநிலம் **Jehanabad**-ல் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, தேசிய ஜனநாயக கூட்டணி நிலையான அரசு நிர்வாகத்தை உறுதி செய்திருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி மீது வாக்காளர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

ஐ என் டி ஐ கூட்டணியில் உள்ள கட்சிகள் மக்கள் நலனுக்காக செயல்படவில்லை என்றும், அந்த கட்சியை சேர்ந்தவர்கள் அதிக அளவில் ஊழல் செய்திருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

அக்கூட்டணியினர் தங்களது குடும்ப உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக மட்டுமே செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் மற்றும் ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சிகள் மக்களின் வரிப்பணத்தை அதிக அளவில் முறைகேடு செய்திருப்பதாகவும், இதனால் அவர்கள் மத்திய புலனாய்வுக்குழுக்களின் பிடியில் சிக்கி வழக்குகளை சந்தித்து வருவதாகவும் திரு நட்டா கூறினார்.

பிஜேபி-யின் மூத்த தலைவர் திரு அமித் ஷா, அவுரங்காபாதில் வாக்கு சேகரித்தார்.

பாலியா, சாலம்பூர் ஆகிய இடங்களில பிரச்சாரம் மேற்கொண்ட சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு அகிலேஷ் யாதவ், பணவீக்கம் மற்றும் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர பிஜேபி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதாக பொய்யான வாக்குறுதிகள் அக்கட்சியால் அளிக்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பெரும் செல்வந்தர்களுக்கு 25 லட்சம் கோடி ரூபாய் அளவிக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், ஆனால் விவசாயிகள் கடனை ரத்து செய்ய பிஜேபி நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் திரு அகிலேஷ் யாதவ குற்றம் சாட்டினார்.

ராஷ்ட்ரிய ஜனதாதள் மூத்த தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத், **Buxar** தொகுதியில் வாக்கு சேகரித்தார்.

அக்கட்சியை சேர்ந்த மூத்த தலைவர் திரு மனோஜ் ஜா, பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தேசிய ஜனநாயக கூட்டணி, மக்களவைத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழக்கும் என்று பிஜேபி கட்சியினர் நன்கு உணர்ந்துள்ளததால்தான் தங்களது கட்சியின் மூத்த தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத்தை அச்சுறுத்தும் விதமாக பேசி வருவதாக குற்றம் சாட்டினார்.

**<<<<<<<>>>>>>**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Remal** தீவிரப் புயல் மேற்குவங்கம் - பங்களாதேஷ் இடையே இன்று நள்ளிரவு கரையை கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் புயலின் நகர்வினை கண்காணிப்பதற்காக கட்டுப்பாட்டு அறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக மேற்குவங்க அரசு கூறியுள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினரும், அம்மாநில கரையோரப்பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

இந்திய கடற்படையும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இரண்டு கப்பல்களில் மருந்துகள், உணவுப்பொருட்கள் உள்ளிட்ட நிவாரணப்பொருட்கள் மற்றும் மீட்புக்குழுக்களும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக பாதிப்பு ஏற்படும் பகுதிகளுக்கு உடனடியாக சென்று உதவுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையின் விமானங்களும், சேட்டக் ஹெலிகாப்டர்களும், டார்னியர் ரக சிறிய விமானங்களும் விரைந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மீட்புப்பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலையின் சீற்றத்திலும், கடற்பகுதியில் மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கான தனிப்படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கூடுதலான மீட்பு உபகரணங்கள் மற்றும் கடற்படையின் மீட்புக்குழுக்கள் தேவை ஏற்படும் பட்சத்தில் விசாகப்பட்டினத்தில் இருந்து, கொண்டுவரப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் வெள்ள மீட்புக்குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தில்லி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், குழந்தைகளையும், உறவினர்களையும் இழந்து வாடும் அனைவருக்கும் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன், இந்த துயரத்தின் தாக்கத்திலிருந்து மீண்டு வருவதற்கான வலிமையை இறைவன் அருள வேண்டும் என பிரார்த்தனை செய்வதாக கூறியுள்ளார்.

காயமடைந்த குழந்தைகள் விரைந்து நலம்பெற தாம் பிரார்த்தனை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள செய்தியில், பச்சிளம் குழந்தைகள் உயிரிழந்திருப்பது மனவேதனையை அளிப்பதாக கூறியுள்ளார்.

குடும்ப உறுப்பினர்களுக்கு தமது இரங்கலை தெரிவிப்பதுடன், அவர்கள் இந்த சம்பவத்தின் தாக்கதிலிருந்து மீள வேண்டும் என பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதிக்கப்பட்டோர் குடும்பத்தினரின் துயரத்தை தாம் பகிர்ந்துகொள்வதாக கூறியுள்ளார்.

தீக்காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற வேண்டும் என பிரார்த்தனை செய்வதாக அவர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்திய ஹஜ் யாத்ரீகர்கள் இவ்வாண்டு ஜெட்டாவில் இருந்து, மெக்கா செல்வதற்கு ஹராமைன் அதிவிரைவு ரயில் வசதியை சவுதி அரேபிய ரயில்வே முதல் முறையாக வழங்கியுள்ளது.

இன்று இந்தியாவிலிருந்து ஜெட்டா சென்ற யாத்ரீகர்கள் 300 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய இந்த அதிவிரைவு ரயிலில் அழைத்து செல்லப்பட்டனர்.

அங்குள்ள இந்திய துணை தூரகமும், சவுதி அரேபிய அரசுடன் கலந்துபேசி இந்த வசதியை பெற்றுள்ளது.

இவ்வாண்டு இந்தியாவிலிருந்து செல்லும் 32 ஆயிரம் ஹஜ் பயணிகளுக்கும் இந்த ரயில் சேவை கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

77-ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவில், இந்தியா இதுவரை மூன்று முக்கிய விருதுகளை பெற்று சாதனை படைத்துள்ளது.

பிரான்சில் நடைபெற்றுவரும் இந்த விழாவில், **All We Imagine as Light** என்ற இரு செவிலியர்களின் வாழ்க்கையை சித்திரிக்கும் பாயல் கபாடியாவின் திரைப்படம் கிராண்ட் பிரிக்ஸ் விருது பெற்றுள்ளது.

இந்திய திரைப்படக்கல்லூரி மாணவர் சித்தானந்தா நாயக் இயக்கிய 15 நிமிட கன்னட குறும்படம் **'La Cinef '** பிரிவு விருது பெற்றுள்ளது.

திரைப்பட ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன், சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருது பெற்றார்.

**Anasuya Sen Gupta** சிறந்த நடிகைக்கான விருதையும் பெற்றுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

கேன்ஸ் திரைப்படவிழாவில் கிராண்ட் பிரிக்ஸ் விருது வென்ற பாயல் கபாடியாவுக்கும், குறும்படத்திற்கான விருது வென்ற சித்தானந்தா நாயக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியாவின் முன்னணி மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் தொழிற்சாலை பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகே தொடங்கப்பட்டுள்ளது.

அங்குள்ள இந்திய துணை தூதர் திரு பினராய் வர்மா, பங்களாதேஷ் பிரதமரின் முதலீட்டு ஆலோசகர் திரு சல்மான் ரஹ்மான் ஆகியோர் இந்த மருந்து தொழிற்சாலையை தொடங்கிவைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு பினராய் வர்மா, இந்தியா – பங்களாதேஷ் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் விதமாக இந்த புதிய நிறுவனம் அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்திய முதலீட்டாளர்கள் பங்களாதேஷில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

முப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் மனோஜ் பாண்டேயின் பதவிக்காலம் அடுத்த மாதம் 30-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்புதலை பணி நியமனங்களுக்கான அமைச்சரவைக்குழு அளித்துள்ளது.

மனோஜ் பாண்டே இம்மாதம் 31-ஆம் தேதி ஓய்வுபெற இருந்த நிலையில், இந்த பதவி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

ஜி-7 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய ரிசர்வ் வங்கி ஆளுநர்களின் மாநாடு இத்தாலியின் **Stresa** நகரில் நிறைவடைந்தது.

உலக பொருளாதார நடவடிக்கைகள், யுக்ரைனுக்கு நிதியுதவி, பன்முக வங்கி கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து மூன்று நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

உலகளாவிய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையில், உறுதியான நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் மேற்கொண்டிருப்பதாகவும் இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பணவீக்கத்தின் அளவு மிதமானதாகவே உள்ளதாகவும், ஜி-7 நாடுகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ஆகிய நாடுகள் ஜி-7 கூட்டமைப்பில் உறுப்பு நாடுகளாக செயல்பட்டு வருகின்றன.

ஆண்டுக்கு ஒருமுறை கூடி, பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான விஷயங்களை ஜி-7 நாடுகள் விவாதித்து வருகின்றன.

<<<<<<<>>>>>>

பப்புவா நியூ கினியா நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 670-ஆக அதிகரித்துள்ளது. அப்பகுதியில் **Enga** மாகாணத்தில் கனமழை காரணமாக தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தொடர்ந்து நிலச்சரிவுகளும் ஏற்படுவதால் மீட்புப்பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் ஹைதராபாத் அணி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

-------------

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியாவின் பி வி சிந்து தோல்வியடைந்தார்.

-------

உலக இளையோர் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் சஞ்சனா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

-------------

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச நீச்சல் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--------

**Slovakia-**வில் நடைபெற்ற சர்வதேச நடைப் போட்டியில் இந்தியாவின் **Akshdeep Singh** வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<<<<END>>>>>>